**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.284/2009**

Deposition of **D.W.3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 17.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வமணி Father's Name : நடேசன்

துவக்க நேரம் : 01.11 P.M.

**4-ஆம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனக்கு வாதிகள், பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். இறந்துபோன 1-ஆம் பிரதிவாதி பெருமாள் எனது நண்பர். வாதியின் கொடுக்கல், வாங்கல் பற்றி எனக்கு தெரியும். பிரதிவாதி பெருமாள் அளவிற்கு வாதி வெங்கடாஜலம் எனக்கு பழக்கமில்லை என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். வாதி வெங்கடாஜலம் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் வெங்கடாஜலம் அதிக வட்டி கேட்டதால் பெருமாள் கொடுக்க முடியாது என கூறியதால் வெங்கடாஜலம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. வாதி வெங்கடாஜலம் இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடாஜலம், பெருமாள் இருவரும் இறந்துவிட்டனர் என்ற விவரம் தெரியாது என்றால் தெரியும். வெங்கடாஜலம் இறந்த போன பெருமாள் மற்றும் அவரது மகன் அழகேசன் ஆகியோர்களுடன் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட விவரம் தெரியுமா

என்றால் தெரியாது. வாதி வெங்கடாஜலம் புறம்போக்கு நிலத்தைதான் அனுபவித்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வெங்கடாஜலம் அரசு புறம்போக்கு நிலத்தை அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் ஆமாம். பெருமாளுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் சுமார் 2 ஏக் நிலம் இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும், பெருமாளுக்கு 2.52 செண்ட் நிலம் உள்ளது என்றாலும் சரியல்ல. முதல் நிரூபண வாக்குமூலம் யார் கூறி தயாரிக்கப்பட்டது தயாரிக்கப்பட்டது என்றால் நான் கூறியதன் அடிப்படையில்தான் தயாரிக்கப்பட்டது.

4. வெங்கடாஜலத்திற்கு பட்டா நிலம் எதுவும் இல்லை என்பதால் அவருக்கு நிலம் வேண்டுமென்பதால் பெருமாள் மற்றும் அவரது மகனிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் இல்லை, அவர்களுக்குள் கொடுக்கல், வாங்கல்தான் இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், கொடுக்கல் வாங்கல் இருந்திருந்தால் முழு நிலத்திற்கும் ஒப்பந்தம் செய்திருப்பார்கள் என்றாலும், ஆனால் பெருமாள் 1.52 செண்ட்டிற்கு மட்டுமே கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்றாலும் சரியல்ல, அவ்வாறு எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை.

5. பெருமாளுக்கு ச.எண். 126/2-ல் 2 ஏக்கர் நிலமும், 126/3-ல் 0.52 செண்ட் நிலமும் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ச.எண்.126/2-ல் 1 ஏக்கரும், ச.எண். 126/3-ல் 52 செண்ட் நிலமும், கிணறும் மற்றும் மின் இணைப்பில் பாதி ஆகியவைகளுக்கு வாதி வெங்கடாஜலத்திடம் விற்பதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் இல்லை, அவர்களுக்குள் கொடுக்கல், வாங்கல்தான் இருந்தது.

6. கடந்த 2000-ஆம் ஆண்டிலிருந்து பெருமாளுக்கு கடன்கள் இருந்தது என்றால் இல்லை, 2007-ஆம் ஆண்டு வெங்கடாஜலத்திடம் கடன் வாங்கியது மட்டும் எனக்கு தெரியும். பெருமாள்

யார், யாரிடம் பணம் வாங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெருமாள் 3 நபர்களிடம் கடன் வாங்கி அந்த கடனை கட்ட முடியாததால் நிலத்தை விற்று கடனை கட்ட முடிவு செய்துதான் வெங்கடாஜலத்திடம் தனது நிலத்தை விற்க ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள் 3 நபர்களிடம் கடன் வாங்கியிருப்பதாக கூறியுள்ளது தவறு என்றால் சரிதான்.

7. பொதுவாக கடன் வாங்கினால் அதற்கு ஆதாரமாக கிரய ஒப்பந்தம் செய்து தர மாட்டார்கள் என்றால் சரிதான். வெங்டாஜலம், பெருமாளிடம் ரூ.10 வட்டி கேட்பதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் அது தொடர்பாக பெருமாள் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை, ஆனால் வெங்கடாஜலம் அதிக வட்டி கேட்டது உண்மைதான். நான் சொல்வது தவறு என்றாலும், உண்மையில் வெங்கடாஜலம் அதிக வட்டி கேட்டிருந்தால் பெருமாள் புகார் கொடுத்திருப்பார் என்றாலும் சரியல்ல.

8. எனது நிரூபண வாக்குமூலத்தில் பஞ்சாயத்து பேசியபொழுது பிரதிவாதி பெருமாளிடம் நீ நீதிமன்றத்தின் மூலமே உன் கடன் பிரச்சனையை தீர்த்துக்கொள் என்று தெரிவித்து விட்டு வந்தோம் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் பெருமாள் அது தொடர்பாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் இருக்கும் இடத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் சுமார் 1-1/2 கி.மீ இருக்கும்.

9. தாவா சொத்திற்கு அருகிலுள்ளவர்கள் யாரும் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வரவில்லை என்பதாலும், பிரதிவாதிக்கு நான் நண்பர் என்பதால் நான் அவருக்க ஆதரவாக பொய் சாட்சிய்ம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெங்கடாஜலம், பெருமாள் மற்றும் அவரது மகன் அழகேசன் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை.

10. வா.சா.ஆ.1-ஆன 03.09.2007 தேதியிட்ட விற்கிரய உடன்படிக்கை பத்திரத்தில் உள்ள

விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாது என்றாலும், வாதி கோரியுள்ளவாறு பிரதிவாதிகள், வாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தற்பொழுது சுமார் ரூ. 25-லிருந்து ரூ. 30 இலட்சம் மதிப்பு இருக்குமென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்பொழுது சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் வாதிக்கு கிரயம் செய்து கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்பொழுது கொடுத்துள்ள சாட்சியத்திற்கும், முதல் விசாரணை சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.43 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D.Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.284/2009, Dt.17.09.2025.